1983 பிப்ரவரி 2]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வாங்கும் போது ஒருவருக்கொருவர் ஜாமீன் போடுகிறார்கள். அப்படி ஜாமீன் போட்டவர்கள், கடன் வாங்கியவர் கடனைத் திருப்பிக் கட்டாவிட்டால்; அவர் கடனைக் கட்டிவிட்டாலும், மீண்டும் அவர் கடன் பெறுவதற்கு வழியில்லாமல் அதிலே கஷ்டமிருக்கிறது. எனவே, ஜாமீன் போட்டவர்களுக்கும், கடனைத் திருப்பிக் கட்டியிருந்தால், அவர்களுக்கு கடன் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்களில் ஒருவர் கடன் வாங்குகிறபோது, அவருக்கு சூரிட்டியாக, ஜாமீனாக வருகின்றவர்கள், வாங்கி கடனைத் திருப்பிக் கட்டிவிட்டாலும்கூட, கடன் வாங்கியவர், அவருக்கு ஜாமீன் கொடுத்தவர் ஆகியோருக்கு கடன் கொடுக்கக்கூடாத நிலை இதுகாறும் இருந்து வந்தது. இதனால் பல விவசாயிகளுக்கு இன்னல்கள் ஏற்பட்ட காரணத்தினால், சூரிட்டியாக இருந்தவர் கடனைத் திருப்பிக் கட்டிவிட்டால், அவருக்கு அடுத்த கடனைக் கொடுக்கலாம் என்று அரசு அண்மையில் உத்தரவிட்டிருக்கிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வாங்கியவர் கட்டாத நிலையிலே, அவருக்கு உதவி செய்யும் முறையிலே, 'வாரக் கடன் நிதி' என்றிருக்கிறது, அந்த நிதியில் எவ்வளவு பணம் இருக்கிறது. எத்தனை பேர்கள் அதனால் பயனடைந்திருக்கிறார்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கள்ளக்குறிச்சி சின்னசேலம் பேரூராட்சிக்கு மணிமுத்தாற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண் 110—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார —

(அ) கள்ளக்குறிச்சி, சின்னசேலம் பேரூராட்சிக்கு மணிமுத்தாற்றில் இருந்து குடிநீர் எடுத்து செல்லும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) உத்தேச மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) 1980-81 விலை நிலவரப்படி ரூ. 121.51 இலட்சம்.

(இ) ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரைப்படி பேரூராட்சிகளின் நிதி நிலைமைகளையொட்டி குறைந்த செலவில் திட்டம் உருவாக்க இயலுமா என்பது பற்றி ஆராயப்படுகிறது.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கின்ற போது, அங்குள்ள நிதிநிலையை வைத்து ஆராயப்படுகின்றது என்று சொன்னார்கள். ஆனால், நீண்ட நெடுங்காலமாக இருக்கக் கூடிய பிரச்சனை, பொதுவாக கள்ளக்குறிச்சி தாலுக்காவைப் பொறுத்தவரைக்கும், ஒரு வறட்சியான பகுதியாக அது இருக்கிறது. அங்குள்ள தண்ணீர் பிரச்னையைப் பொறுத்தவரையில், பல காலமாக அங்கு இருந்துவரும் பிரச்னையைப் போக்குவதற்கு பேரூராட்சியின் நிதி நிலைமை போதவில்லையென்றாலும் உலக வங்கியின் மூலமாக நிதியைப் பெற்று, செயல்படுத்துவதாகச் சொன்னார்கள். ஆகவே, இதை உணர்ந்த அரசு, தீவிரமாக, உடனடியாக, உலக வங்கியின் மூலம் நிதி பெற்று, அங்கு தண்ணீர் கொடுப்பதற்கு, அந்தத் திட்டத்தை செயல்முறைக்கு கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற மதிப்பீடு மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், குறைந்த மதிப்பீட்டில் மலிவான குடிநீர் திட்டம் ஒன்றைத் தயார் செய்து கொடுக்கும்படி பணிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, குறைந்த மதிப்பீட்டில் குடிநீர் திட்டத்தை உருவாக்குவதற்கு மீண்டும் பரிசீலனை செய்யப்படும். எப்படியும் குடிநீர் கொடுக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடுதான் அதிக மதிப்பீட்டில் இல்லாமல், குறைந்த அளவில் கொடுப்பதற்காக பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த அளவு தண்ணீர் கிடைக்கும் என்று கூறினார்கள். கள்ளக்குறிச்சி என்பது மணிமுதாறிலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் தான் இருக்கிறது. இப்போது கூட குடிநீர் வடிகால் வாரியத்தினர் அங்கு போர் போட்டார்கள். அப்போது ஒரு நிமிடத்திற்கு 600 கேலன் தண்ணீர் கிடைக்கும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைவிட அதிகமாக தண்ணீர் கிடைப்பதற்கு வேறு இடம் கிடைக்காது. ஆகவே அங்கேயிருந்து தண்ணீர் கொடுப்பதற்கு அரசு உடனடியாக முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1983 பிப்ரவரி 2]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாற்று அணையிலிருந்து தண்ணீர் எடுப்பது தான் கேள்வி. இப்போது அதிக செலவில் தண்ணீர் எடுப்பதற்கு போதுமான நிதி ஆதாரம் இல்லை. ஆகவே குறைந்த செலவில் எடுத்துக்கொள்வோம். நிதி ஆதாரம் உயரும் என்று எல்லோரும் நம்புவோம். 'ஆக்மென்டேஷன் ஸ்கீமை' பின்னால் எடுத்துக்கொள்வோம் என்பதுதான் இப்போது இருக்கிற நிலைமை.

விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்சக் கூலி விகிதத்தைத் திருத்தி அமைக்கும் திட்டம்.

*வினா எண் 111— திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்சக் கூலி விகிதத்தை திருத்தி அமைக்க மத்திய அரசு மாநில அரசுகளுக்கு ஆலோசனை கூறியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விவரங்கள் என்ன ?

(இ) எப்பொழுது கூலி விகிதங்கள் திருத்தி அமைக்கப் படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ); (ஆ) மற்றும் (இ): 1981 ஆம் ஆண்டு நடந்து முடிந்த மாநில தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் எல்லா தொழில்களுக்கும் குறிப்பாக விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழிலில், குறைந்த அளவு ஊதிய வீதங்களை திருத்தியமைப்பதற்கான நடவடிக்கையில் மாநில அரசுகள் துரிதமாக ஈடுபட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. நம் மாநில அரசு அமைத்துள்ள விவசாய உயர் மட்டக் குழுவும் விவசாய வேலைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதியம் தற்போதுள்ள விலைவாசிக்கேற்ப திருத்தியமைக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. இவைகளைக் கருத்தில் கொண்டு விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்களை திருத்தியமைப்பதுபற்றி அரசுக்கு ஆலோசனை கூற ஒரு குழு 2-3-82 அன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கை அரசுக்கு கிடைத்துள்ளது. இதன் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன. விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தளவு ஊதியம் விரைவில் மாற்றியமைக்கப்படும்.